உ

# குருபாதம்

## பிரதோஷ கால வரலாறு

ஆதிகாலம் தொட்டு மேல் உலகத்தில், தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் சதா காலமும், போர் நடந்தது. அசுரர்கள் தங்கள் குருவான சுக்ரபகவானின் அருளால் தவவலிமையின் சிறப்புகளை பெற்று, அதன் மூலம் கடும் தவம் புரிந்து பல வரங்களைப் பெற்று தேவர்களுக்கு கெடுதிகளை செய்துவந்தார்கள்.

தேவர்கள் அசுரர்களால் ஏற்படும் கொடுமைகளை தாங்க முடியாமல் சர்வேஸ்வரன், திருமால், பிரம்மா இவர்களிடம் முறையிட, அவர்கள் பல அவதாரங்களை எடுத்து தேவர்களின் துயர்களை துடைத்தார்கள் என்பது அவதாரங்களின் மூலம் நாம் அறிய முடிகின்றது.

தேவர்கள் இத்தகைய ஆபத்தில் இருந்து விடுபட அவர்கள் சாகா வரம் பெற அமுதம் தான் சிறந்தது என்பதை உணர்ந்து அதை அடைய திருபாற்கடலை கடைவதற்கு அசுரர்களின் உதவியும் தேவைப்பட்டது. அவர்களிடம் ஒப்பந்தம் செய்து கொண்டு அமுதத்தை உரிய பாதி அவர்களுக்குத் தருவதாகச் சொல்லி, அவர்களையும் சேர்த்துக் கொண்டார்கள். அதன்படி மந்திரகிரியை மத்தாகவும், சந்திரனை தூரியாகவும், வாசுகியை தாம்பாகவும் அசுரர்கள், வாசுகி என்னும் நாகத்தின் தலையைப் பிடித்தும், தேவர்கள் வால் பகுதியையும் பிடித்து திருப்பாற்கடலைக் கடைந்தார்கள்.

திருப்பாற்கடலை கடையும் நாள் சிறப்பாக இருக்க வேண்டும் என்று எண்ணி அன்று தசமி திதியை தேர்வு செய்தனர். மறுநாள் ஏகாதசி திதி அன்று வாசுகி என்ற நாகம் பாற்கடலை கடையும் பொழுது தன்னிடம் உள்ள விஷத்தை உமிழ்ந்தது.

உ

## குருபாதம்

அப்போது கடலில் இருந்து நஞ்சு வெளிப்பட்டது. இரண்டும் சேர்ந்து தன் வீரியத்தால் ஒன்று சேர்ந்து ஆல கால விஷம் ஆகி மிக பயங்கரமான உஷ்ணத்தோடு தேவர்களை தாக்கியது. தேவர்கள் செய்வது அறியாது வலது பக்கமும் இடது பக்கமும் சிதறி ஓடி ஒளிந்தார்கள். ஆனாலும் இவர்களை ஆலகால விஷம் விடாது துரத்தியது. ஆல கால விஷத்தில் பயந்து ஓடிய தேவர்கள் முதலில் பிரம்மாவிடம் சென்று உதவி கோரி திருகயிலாயம் அடைந்து நந்தி தேவரின் அண்டத்தில் ஒளிந்து கொண்டார்கள்.

ஆலகால விஷம் நந்தி தேவரின் அண்டத்துனுள் செல்ல இயலாது. ஆனால் நந்தி தேவரை சுற்றி சுற்றி வந்தது. அடைக்கலம் அடைந்த தேவர்கள் சர்வேஸ்வரரை நோக்கி தங்களை காப்பாற்றி ரட்சிக்கும் படி கேட்டுக் கொண்டார்கள்.
தேவரின் துயரங்களை உணர்ந்த சர்வேஸ்வரனை துதித்த நேரம் நித்திய பிரதோஷம் காலமாகும். தேவர்களின் வேண்டுகோளை கேட்ட சிவபெருமான் சுந்தரரை நோக்கி அந்த ஆலகால விஷத்தை கொண்டு வரும்படி சொன்னார்.

சுந்தரர் ஆலகால விஷத்தை ஒன்று திரட்டி நாவல் கனி போல் உருட்டித் திரட்டி எடுத்து சர்வேஸ்வரனின் திருக்கரத்தில் அளித்தார்.
சர்வேஸ்வரன் நந்தி தேவரின் இரு கொம்புகளுக்கு இடையே தோன்றி அந்த ஆலகால விஷத்தை அருந்தினார். ஆனந்த தாண்டவம் ஆடினார். ஆலகால விஷம் சர்வேஸ்வரனின் வயிற்றுனுள் சென்றால் பூலோகம் எல்லாம் அழிந்து விடும். வெளியில் உமிழ்ந்தால் தேவலோகம் எல்லாம் அழிந்துவிடும் என்று உணர்ந்து சர்வேஸ்வரன் உமாதேவியின் அருளால் கண்டத்தில் அந்த விஷத்தை நிறுத்திக்கொண்டார். அந்த ஆலகால விஷம் நீலநிறமாகி தொண்டை பகுதியில் நின்றுவிட்டது. ஆதலால் தான் நீலகண்டன் என போற்றி பணிகிறோம்.

உ

# குருபாதம்

ஆலகால விஷத்தால் துன்பம் நீங்க பட்டு தேவாதி தேவர்கள் திருகயிலாயம் புறப்பட்டு திருபாற்கடல் சென்று, மறுபடியும் கடலை கடைந்து அமுதத்தை பெற்றார்கள்.

அமுதம் அருந்திய தினம், துவாதசி திதி. யாவரும் அமுதம் கிடைத்த மகிழ்ச்சியில் அமுதம் கிடைக்க உதவிய சிவபெருமானை மறந்து அன்று பூராவும் ஆடியும், பாடியும் மகிழ்ந்தனர். மறுநாள் திரோயதசி திதி, தேவர்கள் தங்கள் தவறை உணர்ந்து கயிலாயம் சென்று நீலகண்டனை தாங்கள் செய்த தவறுக்கு மன்னிக்கும்படி வேண்டிக் கொண்டார்கள். சிவபெருமான் மனமகிழ்ந்து நந்தியின் இரு கொம்புகளுக்கு இடையே தோன்றி நடனமாடி தேவர்களுக்கு காட்சி தந்து அருள் வழங்கினார்.

அருள் வாக்கினால் பிரதோஷ காலங்களில் என்னை துதிப்போருக்கு எந்த விதமான தோஷங்கள் இருந்தாலும் அது நீங்கி, அவர்கள் எல்லா விதமான நன்மைகளும் பலன்களும் கிடைக்கப் பெறுவார்கள் என்று அருள் வழங்கினார்.

சிவபெருமான் ஆனந்த நடனமாடி அருள்புரிந்த நேரமே பிரதோஷ நேரமாகும்.

பிரதோஷ நேரத்தில் அம்மையப்பரை தரிசனம் செய்து அருள்பெறுவோம்.

அன்பே சிவம்

www.sivabhogam.com
sivabhogam@gmail.com
Follow us on
+91 9444039366